இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவக் கற்கைப் பீடம்

முகாமைத்துவக் கற்கைகள் (சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்

OSU4574: சட்டத்திற்கான அறிமுகமும் ஒப்பந்த சட்டமும்
இறுதிப் பரீட்சை -2024/2025
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 28 ஜூன் 2025 *நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30*

அறிவுறுத்தல்கள் :

- **இவ்வினாத்தாள் ஆறு (06) வினாக்களை உள்ளடக்கியுள்ளது.**
- **முதலாம் (01) வினா கட்டாயமானது.**
- **முதலாம் (01) வினாவிற்கும், ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்குமாக, மொத்தம் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்க.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் இருபது (20) புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.**
- **தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1) a) அதிகாரப் பிரிவினை கோட்பாட்டினை (doctrine of separation of powers) விளக்குக. (10 புள்ளிகள்)

b) அதிகாரப் பிரிவினை கோட்பாடு எந்த அளவிற்கு இலங்கையில் செயல்படுகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

2) a) 'சட்ட மூலங்கள்' (sources of law) என்பதன் பொருளை விளக்குக. (06 புள்ளிகள்)

b) இலங்கையின் மூன்று பிரதான சட்ட மூலங்களைக் (primary sources of law) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

c) இலங்கையில் உள்ள ஒரு (01) முக்கியமான சட்ட மூலம் குறித்து ஒரு சிறு குறிப்பு வரைக. (06 புள்ளிகள்)

d) இலங்கையில் உள்ள மூன்று (03) முக்கிய தனியார் சட்டங்கள் (personal laws) யாவை? ஒவ்வொன்றினதும் முக்கிய அம்சங்களை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

3) a) இலங்கையில் உள்ள நீதிமன்றங்களின் படிநிலையை விவரிக்க. (05 புள்ளிகள்)

b) இலங்கையின் மிக உயர்ந்த நீதிமன்றம் எது, அது எந்த வகையான வழக்குகளை விசாரிக்கிறது? (06 புள்ளிகள்)

c) மூன்று (03) வகையான மாற்று தகராறு தீர்க்கும் (Alternative Dispute Resolution -ADR) வழிமுறைகளை அடையாளம் காண்க. (03 புள்ளிகள்)

d) மாற்று தகராறு தீர்க்கும் (ADR) வழிமுறைகளின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் யாவை? (06 புள்ளிகள்)

4) சமந்தி தனது வீட்டின் உரிமையை மாற்ற ஒப்புக்கொண்டு கமலுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இருப்பினும், சந்தையில் சொத்து விலைகள் அதிகரித்ததால், அவர் தனது ஒப்பந்தக் கடமைகளைச் செய்ய மறுத்து, வீட்டை வேறு ஒருவருக்கு அதிக விலைக்கு விற்கத் திட்டமிடுகிறார். இந்த சூழ்நிலையின் அடிப்படையில், (a) to (d) வரையிலான வினாக்களுக்கு விடையளிக்க.

a) கமலுக்கு கிடைக்கக்கூடிய தீர்வுகள் (remedies) குறித்து ஆலோசனை கூறுக. (05 புள்ளிகள்)

b) இதற்கு தீர்வு காண கமல் எந்த நீதிமன்றத்தை நாட வேண்டும்? (05 புள்ளிகள்)

c) ஒருவேளை அவ்வீடு தீ விபத்தால் சேதமடைந்து; சமந்தியால் அவ்வீட்டின் உரிமையை மாற்ற முடியாவிட்டால், கமல் மற்றும் சமந்தியிடையேயான ஒப்பந்தத்தின் நிலை என்ன? (05 புள்ளிகள்)

e) ஒப்பந்த உடைமை இவ் வீட்டிற்குப் பதிலாக ஒரு காராக இருந்தால் நீங்கள் (a) ற்கு அளித்த விடை யில் மாற்றங்கள் ஏற்படுமா? உங்கள் விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

5) a) ஒரு ஒப்பந்தத்தை இரத்து (termination) செய்வதற்கான நான்கு வழிமுறைகள் யாவை? (04 புள்ளிகள்)

b) அத்தகைய ஒரு (01) வழிமுறையைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக. (06 புள்ளிகள்)

c) பஹன் மன நோய்வாய்ப்பட்டிருப்பதை அறியாமல், நயனி பஹனுடன் ஒருஒப்பந்தத்தில் நுழைகிறார். இது செல்லுபடியாகும் ஒப்பந்தமா? உங்கள் விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

d) இளவயது (minor) அமாந்தியுடன், சரிதா ஒரு ஆதரிக்கப்படாத ஒப்பந்தத்தில் (unassisted contract) நுழைந்தார். அமாந்திக்கு தற்போது 20 வயதாவதன் காரணத்தினால், அவள் இன்னும் ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட வேண்டுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறாள். சம்பந்தப்பட்ட வழக்குச் சட்டத்தைக் கொண்டு, அமாந்திக்கு ஆலோசனை வழங்குக. (05 புள்ளிகள்)

6) a) ஒரு ஒப்பந்தத்தை வலிதற்றதாக (vitiating elements) மாற்றக்கூடிய மூன்று (03) கூறுகளை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

b) தம்மி, ஒரு மின்னணு நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதி ஆவார். அவர் அனைத்து குளிர்சாதன பெட்டிகளும் அதிக மின்னழுத்தங்களைத் தாங்கும் வகையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்று ஒரு வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கிறார். இந்த தகவலின் அடிப்படையில் வாடிக்கையாளர் ஒரு குளிர்சாதன பெட்டியை வாங்குகிறார், ஆனால் அதிக மின்னழுத்தம் காரணமாக மறுநாள் அது செயலிழக்கிறது.

தம்மியின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு வாடிக்கையாளர் தம்மியின் மீது வழக்குத் தொடர முடியுமா? பொருத்தமான வழக்குச் சட்ட உதவியுடன் உங்கள் விடையை ஆதரிக்க. (07 புள்ளிகள்)

c) 75 வயதான லிஹினி, அதே நாளில் மேற்கூறிய அதே மின்னணு நிறுவனத்திற்குச் சென்று ஒரு குளிர்சாதன பெட்டியை ரூ. 300, 000 இற்கு கொள்வனவு செய்கிறார். இருப்பினும், அவர் தனது மூக்குக் கண்ணாடிகளை அணிய மறந்துவிட்டதால் குளிர்சாதன பெட்டியின் உண்மையான மதிப்பு ரூ. 30, 000 என கவனிக்காது. கொள்வனவு செய்கிறார் .லிஹினியின் இக்கவனயீனம் தொடர்பாக தம்மி அறிந்திருந்தும் குளிர்சாதன பெட்டியை ரூ. 300,000 க்கு விற்க ஒப்புக்கொண்டார். லிஹினி தற்போது குளிர்சாதன பெட்டியைத் திருப்பி (return) அளிக்க முடியுமா என்பது குறித்து உங்கள் ஆலோசனையை நாடுகிறார். (10 புள்ளிகள்)

-பதிப்புரிமைக்குரியது-